# PSWS செய்திமடல்

### ஐரீன் சேவியர் அவர்களின் செய்தி

அன்புடைய உறுப்பினர்களே,

எங்கள் முதல் செய்திமடலை நீங்கள் மகிழ்ச்சியுடன் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் கோரிக்கைக்கு இணங்க, இப்போது தமிழ் மொழிபெயர்ப்பையும் இணைத்து எங்கள் இரண்டாவது செய்திமடலை உங்களுடன் பகிர்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.
ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் தேதி, அனைத்து பெண்களையும் கொண்டாடும் நாளாக சர்வதேச பெண்கள் தினம் நினைவுகூரப்படுகிறது. இந்த ஆண்டு, ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு "உரிமைகள். நீதி. செயல். அனைத்து பெண்களுக்கும் மற்றும் சிறுமிகளுக்கும்." என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்துள்ளது.
இந்தத் தலைப்பு, கடந்த 40 ஆண்டுகளாக PSWS அமைப்பு செய்து வரும் பணியின் நோக்கும் பார்வையும் அழகாக பிரதிபலிக்கிறது என்று நான் நம்புகிறேன். அனைத்து பெண் தொழிலாளர்களின் உரிமைகளும் நீதியும் நிறைவேறுவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து மனதாலும் செயலாலும் இணைவோம். பாலின அடிப்படையிலான பாகுபாடு முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும்.
பெண்களாகிய நாம், குறிப்பாக வீட்டிலும் பொதுவிடங்களிலும் பல்வேறு வன்முறைகளுக்கும் பாகுபாடுகளுக்கும் எதிராக போராடும் அனைத்து பெண்களுடனும் ஒற்றுமையுடன் இணைந்து நடக்க கற்றுக்கொள்ள வேண்டும். பல ஆண்டுகளாக எங்களை ஆதரித்து வரும் PSWS உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.
தயவுசெய்து எங்களின் சமூக ஊடக தளங்களான இன்ஸ்டாகிராம் அல்லது முகநூல் வழியாக எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள்.
எங்கள் குழுவின் சார்பில், உங்களிடம் எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.




### பணிச்செயல்கள் பிப்ரவரி *2026* நடுப்பகுதி – மார்ச் *2026* நடுப்பகுதி

**இளைஞர்கள் / மாணவர்களுடன் ஈடுபாடு**

- **பொருளாதார வன்முறையை, பாலின அடிப்படையிலான பிற வன்முறைகளை நிலைநிறுத்தும் மற்றும் அவற்றுடன் தொடர்பு கொள்ளும் கட்டமைப்பு காரணியாக ஆய்வு செய்வது குறித்து நேர்காணல் *Sunway* கல்லூரி / *6* மார்ச் *2026***

***PSWS,*** **இறுதி ஆண்டு ஆய்வு மற்றும் ஆவணப்படத் திட்டங்களைத் தயாரிக்கும் மாணவர்களுடன் பொருளாதார வன்முறை என்பது பாலின அடிப்படையிலான வன்முறையின் ஒரு வடிவம் என்பதைக் குறித்து தனது அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்தது.**

**வெளிப்புற பங்குதாரர்களுடன் ஈடுபாடு**

- ***16* வயதிற்குக் குறைவான குழந்தைகளுக்கு சமூக ஊடகங்களைத் தடை செய்வது குறித்து முன்மொழிவு பற்றிய இணைய வழி கலந்துரையாடல் மனித உரிமைகள் ஆணையம் *(SUHAKAM)* / *04* மார்ச் *2026***

**16 வயதிற்குக் குறைவான குழந்தைகளுக்கு சமூக ஊடகங்களைத் தடை செய்வதற்கான முன்மொழிவு குறித்து நடைபெற்ற இணைய வழி வட்டமேசை கலந்துரையாடலில் PSWS பங்கேற்று, குழந்தைகளின் உரிமைகள் மற்றும் இணைய பாதுகாப்பு தொடர்பான கருத்துகளைப் பகிர்ந்தது.**

- **சர்வதேச பெண்கள் தினம் *2026* / பெண்கள் உதவி அமைப்பு *(WAO)* / *09* மார்ச் *2026***

**சர்வதேச பெண்கள் தினம் 2026 ஐ முன்னிட்டு, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான முக்கியமான கண்டுபிடிப்புகள் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து, புதிய போக்குகள் மற்றும் சவால்கள் குறித்து விவாதிக்கும் அறிவு கிர்வு அமர்வு நடைபெற்றது.**



- **சர்வதேச பெண்கள் தினம் *2026* – அதிகாரப்பூர்வ தொடக்கம் மற்றும் கொண்டாட்டம் / பெண்கள், குடும்பம் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சகம் *(KPWKM)* / *10* மார்ச் *2026***

**PSWS, அரசாங்க அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகளுடன் இணைந்து, குடும்பம், சமூகம் மற்றும் நாட்டிற்கு பெண்கள் வழங்கிய பங்களிப்புகளை பாராட்டும் நிகழ்வில் பங்கேற்றது.**

### தொடர்ந்து நடைபெற்று வரும் பணிகள்

- வணிகம் மற்றும் மனித உரிமைகள் (BHR) மற்றும் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் குறித்து அறிவு சார்ந்த தகவல் வளங்களை தயாரித்தல்.

# PSWS செய்திமடல்

**நிர்வாகக் குழு**

- Pushpa Doraisamy
- Muthammah Maddacanno
- Devaki Arumugam
- Mageswary Adikalam
- Stella Pereira
- Vanaja Sangalrayan
- Jayanthi Anthonisamy

**குழு**

- Irene Xavier
- Kerrty Gogelawanan
- Annie Gerra Gunalan
- Jagathesan Muthusamy
- Dorathy Benjamin(Consultant)

- மலேசிய வீட்டு வேலைக்காரர்களை பற்றிய ஆய்வுக்கான தகவல் சேகரிப்பை இறுதிப்படுத்தி, இறுதி அறிக்கையை தயாரித்தல்.
- வணிகம் மற்றும் மனித உரிமைகள் (BHR) மற்றும் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து கலந்துரையாடல்களில் ஈடுபடுதல்.
- சர்வதேச பெண்கள் தினம் 2026 முன்னிட்டு, மலேசியாவில் பெண் தொழிலாளர்களின் உரிமைகளை மையமாகக் கொண்டு உறுப்பினர்களுக்கான நிகழ்ச்சியை திட்டமிடுதல்.

**வரவிருக்கும் செயல்பாடுகள்**

- சம்சுங் (Samsung) நிறுவனத்தின் Persatuan Sahabat Wanita Selangor அலுவலகத்திற்கு வருகை | 02 ஏப்ரல் 2026



பெண்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களை நிர்வகிக்கும் தற்போதைய நடைமுறைகள் குறித்து அறிந்து கொள்ள Samsung நிறுவனத்தின் பிரதிநிதிகள் Persatuan Sahabat Wanita Selangor அலுவலகத்திற்கு வருகை தர உள்ளனர். இந்த சந்திப்பின் போது அறிவு மற்றும் அனுபவங்களை பரிமாறிக் கொள்ளும் ஒரு கலந்துரையாடல் நடைபெறும்.




**மூலம்:** ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் *(OHCHR)* – பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை ஒழிக்கும் குழு *(CEDAW)* உறுப்பினர்கள். படம் *OHCHR* அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

## அறிந்து கொள்வோம்: சிடாவ் *(CEDAW)* உடன்படிக்கை

1979 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிடாவ் (CEDAW), பெண்களுக்கான மிக முக்கியமான சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களில் ஒன்றாகும். CEDAW குழு உலகம் முழுவதிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் உரிமைகள் குறித்த 23 சுயாதீன நிபுணர்களைக் கொண்டுள்ளது. இவர்கள் உறுப்பினர் நாடுகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சிடாவ் (CEDAW) ஒப்பந்தத்தை ஒப்புதல் அளித்த நாடுகளுக்கு மூன்று முக்கிய சட்டப் பொறுப்புகள் உள்ளன:

- பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் நீக்குதல்.

# PSWS செய்திமடல்

- பெண்கள் தங்கள் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை ஆண்களுடன் சமமாக அனுபவிக்கக் கூடிய வகையில் அவர்களின் முழுமையான முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் உறுதி செய்தல்.
- ஒப்பந்தத்தின் நடைமுறைப்படுத்தல் குறித்து CEDAW குழுவிற்கு காலமுறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

மலேசியா 1995 ஆம் ஆண்டு சிடாவ் (CEDAW) ஒப்பந்தத்தை ஒப்புதல் அளித்தது. இதனால், இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள உரிமைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதைக் குறித்து மலேசியா காலமுறை அறிக்கைகளை சிடாவ் (CEDAW) குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். Constructive Dialogue (கான்ஸ்ட்ரக்டிவ் டயலாக்) நடைபெறும் போது, ஒவ்வொரு உறுப்புநாட்டின் அறிக்கையும் குழுவால் பரிசீலிக்கப்படுகிறது. அதன் பின்னர், அவர்கள் கவலைகள் மற்றும் பரிந்துரைகள் Concluding Observations (கான்குளுடிங் ஆப்சர்வேஷன்ஸ்) என்ற வடிவில் வெளியிடப்படுகின்றன. சிடாவ் (CEDAW) குழு மலேசியாவை கடைசியாக மே 2024 இல் மதிப்பாய்வு செய்தது. அவர்களின் பரிந்துரைகள் PSWS இணையதளம் (website)-ல் காணலாம்.

சிடாவ் (CEDAW) என்பது உலகம் முழுவதும் பெண்கள் தங்கள் நாளந்தோறும் வாழ்வில் அர்த்தமுள்ள மாற்றங்களை உருவாக்க உதவும் ஒரு முக்கியமான கருவியாகும். இந்த ஒப்பந்தத்தைப் பற்றி அறிந்து கொள்ள தயவுசெய்து நேரம் ஒதுக்குங்கள். PSWS சிடாவ் (CEDAW) தொடர்பான பணிமுனைவுகளை ஏற்பாடு செய்ய விரும்பினால், Jagathesan-னை தொடர்புகொள்ளவும்.



**ஒவ்வொரு முறையும் ஒரு பெண்மணி தனது உரிமைகளுக்காக எழுந்தால், அவள் அனைத்து பெண்களின் உரிமைகளுக்காக எழுந்து நிற்கிறாள்.**

**-மாயா ஏஞ்சலூ**

***ஊடகங்களில்: சர்வதேச மகளிர் தினம் 2026***

PSWS, சர்வதேச மகளிர் தினம் 2026 ஐ முன்னிட்டு, வீட்டு தொழிலாளர்களின் உரிமைகள் குறித்த எங்களின் கருத்துக் கட்டுரை வெளியிடப்பட்டதை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறது.

**முழு கட்டுரையை வாசிக்க கீழே உள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும்:**
New Straits Times:
https://www.nst.com.my/opinion/letters/2026/03/1393147/stronger-regulatory-framework-needed-domestic-employment
Malaysiakini:
https://m.malaysiakini.com/columns/769752

